**ஆவின் கோவை**

**டெண்டர் அறிவிப்பு**

| | |
|---|---|
| 1. ஒப்பந்தபுள்ளி கோரும் அலுவலர் - | திரு.P. இராமநாதன், B.A, IDD |
| பெயர். பதவி மற்றும் முகவரி | பொது மேலாளர்<br>ஈடி 1116 கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட் பச்சாபாளையம்.<br>காளம்பாளையம், கோவை 641 010 , |
| தொலைபேசி எண்கள் | 0422- 2208007. 2607971 |
| 2. திட்டத்தின் பெயர். | கோவை. மாவட்ட பால் சேகரப்பணி, பால் சேகர குழுக்கள், பால்பவுடர், வெண்ணெய் போக்குவரத்திற்கு தேவையான வாகனங்கள் / டாக்சிகள்,31.03.2026 வரை உள்ள காலத்திற்கு வழங்குதல் |
| கொள்முதல் மதிப்பீடு சுமார் | ரூ. 46.59 இலட்சம் |
| மாடல் | **2010ம் ஆண்டு அல்லது** அதற்கு பின் பதிவு செய்யப்பட்ட மாடல் வாகனங்கள். |
| 3. ஓப்பந்த காலம் | ஒப்பந்த ஆணை வழங்கும் நாளில் இருந்து 31.03.2026 வரை |
| 4. பணிகள் அல்லது கொள்முதல் நடைபெறும் மாவட்டங்களின் பெயர்கள் | கோவை 61 வழித்தடங்கள் மற்றும் பால்பவுடர்/ வெண்ணெய் வழித்தடங்கள் - தமிழ்நாடு மற்றும் வெளிமாநிலம் |
| 5 செலுத்தப்பட வேண்டிய முன் வைப்புத் தொகை விபரம் | டெண்டர் படிவத்தில் காணவும் |
| 6. விண்ணப்பபடிவம் பதிவிறக்கம் செய்வதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | **26.04.2023 மாலை 5.00 மணி வரை** |
| 7. இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 27..04.2023 காலை 11.00 மணி வரை |
| 8. இணையவழி ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் மற்றும் நேரம் | 27.04.2023 காலை 11.30 மணி வரை |
| 9. டெண்டர் முன் கலந்தாயவ்ு கூட்டம் நாள் ( Pre Bid Meeting) ‘ | 11.04.2023 காலை 11.30 மணி<br>கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய வளாகம் |

மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளி படிவத்ததை www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in www.tntenders.gov.in மற்றும் www.aavinmilk.com என்ற இணைய தளம் மூலமாகவும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பொதுமேலாளர்
ஆவின்-கோவை

*ஆவின் : கோவை*

ஈடிIII6, கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்

பச்சாபாளையம், காளம்பாளையம்(அஞ்சல்) பேரூர்(வழி), கோயமுத்தூர் 641 010

# பால் சேகர வழித்தட வாகன ஒப்பந்தப்புள்ளி

# படிவம் - I

# தொழில்நுட்ப படிவம்

ஒப்பந்தப்புள்ளி நாள் : 27.04.2023

படிவம் I

**கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் _________ வழித்தடத்தில் 31.03.2026 வரை வாகனம் வழங்குவதற்கான**

புகைப்படம்

## தொழில் நுட்ப தகவல் விண்ணப்பம் (Technical Bid)

| வ. எண் | விபரம் | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் நிரந்தர முகவரி | |
| 2. | தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். | |
| 3. | வாகன பதிவுச்சான்று புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நபரின் பெயர் | |
| 4. | வாகனத்தின் பதிவு எண் | |
| 5. | வாகனத்தின் கொள்ளளவு | |
| 6. | வாகனம் பதிவு செய்யப்பட்ட ஆண்டு | |
| 7. | வாகனத்திற்கு எந்த தேதி வரை (பர்மிட்) உரிமம் உள்ளது? | |
| 8. | வாகனத்திற்கு எப்சி உரிமம் எந்த நாள் வரை உள்ளது? | |
| 9. | வாகனத்திற்கு எந்த நாள் வரை வரி செலுத்தப்பட்டுள்ளது ? | |
| 10. | வாகனத்திற்கு எந்தநாள் வரை காப்பீடு செய்யப்பட்டுள்ளது ? | |
| 11. | வருமான வரித்துறையினரால் ஒதுக்கப்பட்டுள்ள நிரந்தர வரிக் கணக்கு எண் | |
| 12. | வங்கி கணக்கு எண். விபரம் | |
| 13. | கடந்த காலத்தில் பால் பண்ணைக்கு வாகனம் இயக்கிய அனுபவ விபரம் | |
| 14. | முன் வைப்புத்தொகை (ஈ.எம்.டி) செலுத்திய தற்கான விபரம் தொகை (கேட்பு வரைவோலை எண்/நாள்) | |

ஒப்பந்த காலம் முடியும் வரையிலான காலத்தில் காப்பீடு, சாலை வரி மற்றும் இதர சட்டப்பூர்வமான கட்டணங்களை உரிய தேதிகளில் செலுத்திவிடுவேன் என உறுதியளிக்கிறேன்.

என்னால்/எங்களால் கொடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என்று உறுதி கூறுகிறேன் / உறுதி கூறுகிறோம்.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களின் சான்று செய்யப்பட்ட நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன்.

டெண்டர்தாரர் கையொப்பம்

இடம்:
நாள்:

.

**ED-1116/ கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட் கோவை.IO வாகன ஒப்பந்தத்தில் கலந்து கொள்வதற்கான விதிமுறைகள்**

I. வாகன உரிமையாளர்கள் மட்டுமே வாகன ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

2. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்தப் படிவத்துடன் இணைக்கப்பட்ட ஒப்பந்த விதிமுறைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.

3. வாகன உரிமையாளர்கள் தாங்கள் விரும்பும் வழித்தடத்தின் பெயரை கூறி ஒப்பந்தப்படிவம் பெற வேண்டும். அவ்வாறு கூறி பெறப்பட்ட ஒப்பந்தப்படிவத்தை வேறு தடத்திற்கு உபயோகித்தால் அவரது ஒப்பந்தப்படிவம் முழுமையாக நிராகரிக்கப்படும்.

4. வாகன உரிமையாளர்கள் தங்களது வாகன பதிவு எண்ணை ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் குறிப்பிட்ட பிறகு, அதே வாகன எண்ணை மற்ற வழித்தடங்களில் குறிப்பிடலாகாது. அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் அன்னாரது வாகன ஒப்பந்தப் படிவம் எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கப்படும். முன் வைப்புத் தொகையும் திருப்பித்தரப்படமாட்டாது.

5. வாகன உரிமையாளர்கள் டெண்டர் விவரங்களை www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in மற்றும் www.aavinmilk.com மூலம் இலவசமாகவும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

6. ஒப்பந்தப்படிவத்துடன் கீழ்க்காணும் ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும். பால் சேகரிப்பு வழித்தடத்திற்கு (கீழ்க்கண்ட பட்டியலின்படி) பிணை வைப்புத் தொகையாக இணைய வழியாக மட்டுமே செலுத்த வேண்டும்.

| வ.எண் | வழித்தடம் | உத்தேச தூரம் (நாளொன்றுக்கு) கி.மீ. (மாறுதலுக்குட்பட்டது) | வாகனக் கொள்ளளவு (டன்) (மாறுதலுக்குட்பட்டது) | பிணைவைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நரசீபுரம் | 100 | 2-3 | 27,400 |
| 2 | ஆனைகட்டி | 188 | 1-2 | 40,200 |
| 3 | விராலியூர் BMC | 142 | 1-2 | 30,300 |
| 4 | மதுக்கரை BMC | 52 | 1-2 | 12,500 |
| 5 | பிச்சனூர் BMC | 70 | 1-2 | 16,900 |
| 6 | காரச்சேரி BMC | 82 | 1-2 | 19,800 |
| 7 | கள்ளிப்பாளையம் BMC 1 | 172 | 1-2 | 36,700 |
| 8 | கள்ளிப்பாளையம் BMC 2 | 108 | 1-2 | 23,100 |
| 9 | வடபுதூர் BMC 1 | 38 | 1-2 | 10,400 |
| 10 | வடபுதூர் BMC 2 | 80 | 1-2 | 19,300 |
| 11 | வடபுதூர் BMC 3 | 104 | 1-2 | 22,200 |
| 12 | வடபுதூர் BMC 4 | 60 | 1-2 | 14,500 |
| 13 | கோவில்பாளையம் BMC 1 | 120 | 1-2 | 25,600 |
| 14 | கோவில்பாளையம் BMC 2 | 90 | 1-2 | 21,700 |
| 16 | வடக்குகாடு BMC | 106 | 1-2 | 24,100 |
| 17 | பகவதிபாளையம் BMC | 134 | 1-2 | 28,600 |
| 18 | கிருஷ்ணராயபுரம் BMC | 38 | 1-2 | 10,400 |
| 19 | கோயம்புத்தூர் | 110 | 2-3 | 23,500 |
| 20 | பொள்ளாச்சி | 162 | 2 – 3 | 35,500 |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | பொள்ளாச்சி கட் | 76 | 1 – 2 | 18,300 |
| 22 | ஆனைமலை | 152 | 2 – 3 | 33,300 |
| 23 | ஆனைமலை கட் | 88 | 2 – 3 | 24,100 |
| 24 | தொண்டாமுத்தூர் | 172 | 2 – 3 | 37,700 |
| 25 | தொண்டாமுத்தூர் கட் | 98 | 2 – 3 | 26,800 |
| 26 | சமத்தூர் | 140 | 2 – 3 | 30,700 |
| 27 | சமத்தூர் கட் | 24 | 1 – 2 | 6,600 |
| 28 | தளி | 62 | 2 – 3 | 17,000 |
| 29 | பொன்னாலம்மன்துறை | 84 | 1 – 2 | 20,200 |
| 30 | செங்கத்துறை BMC i | 128 | 1 – 2 | 27,300 |
| 31 | செங்கத்துறை BMC II | 134 | 1 – 2 | 28,600 |
| 32 | போகம்பட்டி BMC I | 118 | 1 – 2 | 25,200 |
| 33 | போகம்பட்டி BMC II | 218 | 1 – 2 | 46,600 |
| 34 | நெகமம் | 186 | 1 – 2 | 39,700 |
| 35 | வரதையம்பாளையம் BMC 1 | 114 | 2 – 3 | 25,000 |
| 36 | வரதையம்பாளையம் BMC 2 | 110 | 1 – 2 | 23,500 |
| 37 | வரதையம்பாளையம் BMC 3 | 110 | 1 – 2 | 23,500 |
| 38 | வரதையம்பாளையம் BMC 4 | 64 | 0.7- 1 | 14,700 |
| 39 | காளம்பாளையம; BMC | 64 | 2 – 3 | 17,500 |
| 40 | ஆலப்பாளையம் BMC 1 | 98 | 2 – 3 | 26,800 |
| 41 | ஆலப்பாளையம் BMC 2 | 98 | 1 – 2 | 23,600 |
| 42 | ஆலப்பாளையம் BMC 3 | 82 | 0.7 – 1 | 18,900 |
| 43 | சம்பரவள்ளி BMC 1 | 90 | 1 – 2 | 21,700 |
| 44 | சம்பரவள்ளி BMC 2 | 62 | 1 – 2 | 14,900 |
| 45 | சாலைவேம்பு | 112 | 2 – 3 | 24,500 |
| 46 | தேரம்பாளையம் 1 | 106 | 1 – 2 | 22,600 |
| 47 | தேரம்பாளையம் 2 | 108 | 1 – 2 | 23,000 |
| 48 | ஊத்துப்பாளையம் BMC | 120 | 1 – 2 | 25,600 |
| 49 | இலுப்பநத்தம் | 68 | 0.7 - 1 | 15,600 |

7 ஒப்பந்த விலைப்புள்ளி கி.மீ. ஒன்றுக்கு எவ்வளவு என்று குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் இணை வழியாக ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்யயப்பட வேண்டும்.

8 இவ்வொன்றிய டெண்டர் குழுவால் குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட நேரத்தில் இணை வழியாக ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

9 ஒப்பந்தம் முடிந்து வாகனத்தை குறிப்பிட்ட தடத்தில் செலுத்தி ஒப்பந்ததாரருக்கு இவ்வொன்றியத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு வாகனத்தை செலுத்த முன்வராவிடில் அன்னாரது முன் வைப்புத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

10 தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் முன் வைப்புத் தொகை பிணை வைப்புத் தொகை கணக்கிற்கு மாறுதல் செய்யப்படும்.

11 பொது மேலாளர், கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட் கோவை அவர்களுக்கு குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளையோ, எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ (அ) ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தப் புள்ளியையோ எவ்வித காரணமும் காட்டாமல் ஏற்கவோ (அ) மறுக்கவோ நீட்டிக்கவோ (அ) ரத்து செய்யவோ முழு உரிமையுண்டு. இதில் பொது மேலாளரின் முடிவே இறுதியானது.

டெண்டர்தாரர் கையொப்பம்

**கீழ்க்கண்ட உறுதிமொழிகளை ஒப்புக்கொண்டு கீழே கையொப்பம் இட்டுள்ளேன்.**

1. பால் சேகர வழித்தடத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள (பட்டியலில் உள்ளவாறு) டேவணித்தொகையை இணைய வழி மட்டுமே செலுத்த வேண்டும்.
2. வண்டியின் ஒரிஜினல் ஆர்.சி.மற்றும் சம்பந்தப்பட்ட பத்திரங்களை தேவைப்படும் சமயங்களில் காண்பிக்க சம்மதிக்கிறேன்.
3. .ஆர்.சி.புத்தகமும் வண்டியின் உரிமையும் எனது பெயரிலேயே உள்ளது. இதில் எவ்வித வில்லங்கமும் இல்லையென உறுதி கூறுகிறேன். வில்லங்கம் இருக்கும்பட்சத்தில் எனது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்க சம்மதிக்கிறேன்.
4. பால் வழித்தடத்தை நன்கு பார்வையிட்ட பின்னரே ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டேன்.
5. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட வாகனம் நல்ல நிலையில் உள்ளது என உறுதி கூறுகிறேன்.
6. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை நானே எனது சுய நினைவோடு பூர்த்தி செய்து எனது புகைப்படம் ஒட்டப்பட்டு கையொப்பம் இட்டுள்ளேன். இதில் பிறருடைய தலையீடு எதுவும் இல்லை என உறுதி கூறுகிறேன்.

டெண்டர்தாரர் கையொப்பம்

**ஈடி1116, கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்**
**கோயமுத்தூர் - 641 010**

31.03.2026 வரையிலான காலத்திற்கு கிராமப்புற சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்து அருகிலுள்ள பால் பண்ணைக்கும்/பால் குளிரூட்டும் நிலையங்களுக்கும் கொண்டு சேர்க்க ஒப்பந்த வாகனம் இயக்க ஒப்பந்தத்தில் கலந்து கொள்வதற்கான

**வரையறைகளும் நிபந்தனைகளும்**

1. ஒப்பந்தக்காலம் முதல் 31.03.2026 வரையிலான காலமாகும். ஒப்பந்தக்காலம் காலாவதியான பின்னரும் அடுத்த ஆண்டிற்கான ஒப்பந்தம் முடிவு செய்யும் காலம் வரையும் அல்லது மூன்று மாதங்கள் எது முந்தியதோ அதுவரை மேற்படி ஒப்பந்தக்காலத்தை நீட்டிக்க ஒன்றியத்திற்கு அதிகாரமுண்டு.

2. ஒப்பந்ததாரர் கிராமப்புற கூட்டுறவு சங்கங்களிலிருந்து பாலை சேகரம் செய்து முழுமையாக மூடப்பட்டுள்ள வாகனங்களில் ஏற்றி காலை/மாலை இரு வேளைகளிலும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் சம்பந்தப்பட்ட பால் பண்ணைக்கோ (அ) பால்குளிரூட்டும் நிலையத்திற்கோ கொண்டு வந்து சேர்க்க வேண்டும்.

3. ஒவ்வொரு பால் சேகர வழித்தடத்திற்குரிய கால துார அட்டவணை ஒன்றியத்தால் முடிவு செய்யப்படும்.

4. அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் கால துார அட்டவணையை ஒப்பந்ததாரர்கள் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அவசியம் ஏற்படின் கால துாரத்தை 24 மணி நேரம் முன்னறிவிப்பு செய்து மாற்றியமைக்க ஒன்றியத்திற்கு முழு அதிகாரமுண்டு.

5. ஒன்றிய செலவினத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் எந்தவித முன்னறிவிப்பின்றி வாகனங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ, வழித்தடங்களின் துாரத்தை மாற்றியமைக்கவோ (அ) வேறு வழித்தடங்களில் உள்ள சங்கத்தை இணைக்கவோ (அ) ஒப்பந்த வாகனத்தை ரத்து செய்யவோ (அ) நிறுத்தி வைக்கவோ ஒன்றியத்திற்கு முழு அதிகாரமுண்டு. இருந்தபோதிலும், ஒப்பந்ததாரர் நமது வாகனத்தில் பணிபுரிபவர்களுக்கும் ஒன்றியம் அவ்வப்போது அறிவிக்கப்படும் மாற்றங்களையும், நெறிமுறைகளையும் பின்பற்றும் பொருட்டு கட்டளையிடத் தேவையான கால அவகாசத்தில் தெரிவிக்கப்படும்.

6. கிராமப்புற சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்ய உள்ள ஒப்பந்த வாகனத்தின் கொள்திறன் போன்ற வாகனம் பற்றிய முழுத்தகவல்கள்:

   அ) ஒப்பந்தப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பதிவு எண் கொண்ட வாகனம்மோட்டர் வாகனக் காப்பீட்டு சட்டத்தின்கீழ் காப்பீடு செய்திருக்க வேண்டும்.

   ஆ) முழு ஒப்பந்த காலத்திற்கு வாகனம் முழு காப்பீடு செய்திருக்க வேண்டும்.

   இ) ஒப்பந்தத்தில் கேட்கப்பட்டுள்ள கொள்திறன் கொண்ட வாகனத்தினை மட்டும் வழங்கிட வேண்டும்.

   ஈ) அங்கீகரிக்கப்பட்ட வாகனம் முழுமையாக நல்ல தரமான தார்பாலின் அல்லது வேறு இலகு உலோகத்தால் நல்ல முறையில் மூடப்பட்டிருக்க வேண்டும்.

உ) அவ்வாறு மூடப்படும் வாகனத்தில் உள்ள கேன்களுக்கோ(அ) மாட்டுத்தீவனத்திற்கோ வெய்யில் மற்றும் மழையில் பாதிக்கப்படாமல் முழு பாதுகாப்பு அளிக்க உள்ளதாக இருக்க வேண்டும். அவ்வாறு வாகனத்தின் மேல் பாகம் மூடப்படாத வாகனத்திற்கு ஒரு நாளைக்கு தண்டனையாக **ரூ.100/-** வீதம் அன்றைய வாடகைக்கட்டணத்தில் வசூல் செய்ய பொது மேலாளருக்கு அதிகாரமுண்டு. மேலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஒப்பந்த வாகனம் பால் பண்ணை (அ) குளிரூட்டும் நிலையத்தை சென்றடைந்தாலும் கூட மேல்பாகம் மூடப்படாமல் இருந்து பால் கெட்டுப்போனால் ஒப்பந்ததாரர் பிழை எனக்கருதி ஒப்பந்ததாரரின் வாடகைக் கட்டணத்தில் வசூல் செய்யப்படும்).

ஊ) அங்கீகரிக்கப்பட்ட வாகனம் ஒன்றியப் பணியின் ஒப்பந்த காலத்தில் வண்டியின் பக்கவாட்டில் மற்றும் முகப்பில் பால் வண்டி என்றும் **கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய ஒப்பந்த வண்டி** என்றும் எழுதப்பட வேண்டும்.

எ) வாகனத்தில் பால் ஏற்றவோ அல்லது இறக்கவோ இடைஞ்சல் இல்லாமல் இருக்கும் வகையில் வாகனத்தின் உட்புறம் உரிய விளக்குப் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஏ) ஒப்பந்த வாகனம் அதில் பணிபுரியும் ஊழியர்கள் மோட்டார் வாகனச்சட்டத்திற்கும் அதில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றத்திற்குட்பட்டு இருக்க வேண்டும். இதை கடைபிடிப்பதில் ஒப்பந்ததாரரின் கவனக்குறைவிற்கு ஒன்றியம் பொறுப்பேற்காது. வழித்தடத்தில் ஏற்படும் விபத்து போன்றவற்றிற்கும் ஒன்றியம் பொறுப்பேற்காது.

ஐ) வாகனத்தில் கேன்களை ஏற்றவும் இறக்கவும் வசதியாக அதன் தளம் பூமி மட்டத்திலிருந்து 3 1/2 அடி மிகாமல் இருக்க வேண்டும்.

7. ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் வழங்கிய 15 தினங்களுக்குள் ஒப்பந்த விதிகளை முழுவதுமாக ஏற்றுக்கொண்டதற்காக ரூ.100/- மதிப்பிற்கான பத்திரத்தில் (ஸ்டாம்ப்பேப்பர்) தட்டச்சு செய்து கையொப்பமிட்டு ஒன்றியத்துடன் ஒப்பந்தம் (அக்ரிமெண்ட்)செய்து கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் முதல் பட்டியலுக்கான தொகை ஒப்பந்தப் பத்திரம் கொடுத்த பின்னரே வழங்கப்படும்).

8. ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வாகனத்தை மட்டும்தான் இயக்க வேண்டும். முன் அனுமதியின்றி வேறு வாகனம் இயக்க அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு முன் அனுமதியின்றி வேறு வாகனம் இயக்கப்படும் வாகனத்திற்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- வீதம் அபராதத் தொகை வசூலிக்கப்படும். முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் செலுத்த அதிகபட்சமாக 15 நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும். ஒரு மாதத்திற்கு மேல் மாற்று வாகனம் இயக்கப்படுமேயானால், முன்னறிவிப்பின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். மாற்று வாகனம் செலுத்த அதிகபட்சமாக 15 நாட்களுக்கு அனுமதி அளித்தாலும் இதர நிபந்தனைகளும் பொருந்தும்.

9. ஒப்பந்ததாரர் கிராமப்புற சங்கங்களிடமிருந்து கால துார அட்டவணைப்படி பால் சேகரம் தன் சொந்தப்பொறுப்பில் செய்ய வேண்டும். குறிப்பிட்ட நேரம் கடந்து பால் பால் பண்ணைக்கோ அல்லது பால் குளிரூட்டும் நிலையங்களுக்கோ சென்று பால் கெட்டுப் போனாலோ அல்லது சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்யத்தவறினாலோ கீழ்க்கண்டவாறு போக்குவரத்து வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

அ. குறிப்பிட்ட காலம் கடந்து பாலை கொண்டு சேர்க்க வேண்டிய இடத்திற்கு தாமதமாக பால் கொண்டு சேர்த்து அதனால் பால் கெட்டுவிட்டால் அவற்றில் 85% பிடித்தம் செய்யப்படும்.

ஆ. சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்யாமல் வரும் பட்சத்தில் முந்தைய நாள் அதே வேளையில் அந்த சங்கத்திற்கு என்ன விலை நிர்ணயம் செய்யப்பட்டதோ, அந்தத் தொகையைப் போன்று இரு மடங்கு வசூல் செய்யப்படும் (Non Collection Penalty) வழியில் பால் கொட்டிவிட்டால் அதன் மொத்த கிரையத் தொகையையும் பிடித்தம் செய்யப்படும்.

10. ஒப்பந்ததாரர் அங்கீகரிக்கப்பட்ட வாகனம் பழுதடைந்தால் தன் சொந்த பொறுப்பில் மாற்று வாகனம் இயக்க வேண்டும். அதற்காக கூடுதல் கட்டணம் வழங்கப்படமாட்டாது. சம்பந்தப்பட்ட தொகுப்பு பால் குளிர்விப்பான் (BMC) அல்லது பால் பண்ணையிலோ அல்லது பால் குளிரூட்டும் நிலையத்திலோ இயந்திர அல்லது மின் தடை ஏற்பட்டாலோ அல்லது வேறுகாரணங்களாலோ கோளாறு ஏற்பட்டாலோ அந்நிலையத்தின் அதிகாரியின் உத்திரவின்படி பாலை ஏற்றிக்கொண்டு அவர்கள் சொல்லுமிடத்தில் தவறாமல் சேர்க்க வேண்டும். அதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தைவிடக் கூடுதல் கட்டணம் வழங்கப்படமாட்டாது.

11. ஒப்பந்த வாகனம்/வாகனங்கள் பழுதடைந்து எந்த ஒரு சங்கத்தின் பாலை சேகரம் செய்ய இயலாத நேரத்தில் சம்பந்தப்பட்ட சங்கமோ அல்லது ஒன்றிய அலுவலரோ மாற்று வாகனம் ஏற்பாடு செய்தாலோ அல்லது அவ்வாகனத்தில் கொண்டு செல்லப்படும் பால் கெட்டு விட்டாலோ அல்லது இது சம்பந்தமாக வேறு விதத்தில் இழப்பு ஏற்பட்டாலோ அதற்குண்டான முழுத் தொகையை ஒப்பந்ததாரரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும்.

12. பால் சேகரம் செய்யும் இடத்திலும் மற்றும் பால் பண்ணை/BMC/பால் குளிரூட்டும் நிலைய பால் கேன்களை ஏற்றும் பணியிலும் இறக்கும் பணியிலும் ஒப்பந்ததாரர் தன் பொறுப்பில் பணியாளர்களை ஈடுபடுத்தவேண்டும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட வாகனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் மாநில காப்பீட்டுத் திட்டப்பிரிவு 40(1) மற்றும் (3) எங்கெல்லாம் அமுல்படுத்தப்படுகிறதோ அங்கெல்லாம் மேற்படி திட்டத்தின் கீழ் கொண்டு வந்து மாதாமாதம் அதற்குரிய கட்டணத்தை செலுத்த வேண்டும். மேற்சொன்ன மாநில காப்பீட்டுத்திட்டப் பிரிவுகள் அமலாக்கம் செய்யப்படாத பால் பண்ணை/பால் குளிரூட்டும் நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள வழித்தடங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் பாலிஸி எடுக்க வேண்டும். இது ஒப்பந்ததாரரின் முழு பொறுப்பாகும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட வாகனத்தில் பணிபுரியும் டிரைவர் / கிளீனர் ஆகியோர் அவர்களிடத்தில் அளிக்கப்படும் ஒன்றியத்திடமிருந்து சங்கங்களுக்கு அனுப்பப்படும் எந்த ஒரு பொருளோ(அ) டிரக்சிலிப், ஒப்புதல் கடிதம், பால் பணம் பட்டுவாடா பட்டியல் முதலியவைகளுக்கு ஒப்புதல் அளித்து தவறாமல் கொண்டு சேர்க்கப்பட வேண்டும். அதே போல் சங்கங்களிடமிருந்து ஒன்றியத்திற்கு அனுப்பப்படும் அனைத்துக்கும் ஒப்புதல் வழங்கி தவறாமல் கொண்டு சேர்க்க வேண்டும்.

(இ) கிளீனர் வாகனத்தின் பின்புறத்தில்தான் இருக்க வேண்டும். ஒன்றிய சட்ட திட்டத்தை கடைபிடிக்காத டிரைவர் மற்றும் கிளீனரை உடனடியாக மாற்ற வேண்டும். மேலும் அவர்களை வேறு எந்த வழித்தடத்திலும் பணியில் அமர்த்தக் கூடாது.

(ஈ) வாகன டிரிப் சீட் மற்றும் இதர சட்டபூர்வமான ரிகார்டுகளை ஒப்பந்ததாரர் தன் சொந்தப்பொறுப்பில் பராமரிக்க வேண்டும். ஒன்றியம் எந்த பொறுப்பையும் ஏற்காது.

13. (அ) ஒப்பந்ததாரர் ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கும் சங்கங்களிடமிருந்து ஒன்றியத்திற்கு வாகனத்தில் அனுப்பப்படும் கேன்கள், கேன் மூடிகள் மற்றும் இதர ஆவணங்களுக்கு முறையான கணக்கு பராமரிக்கப்பட வேண்டும் இவைகளில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் அதற்கான கிரையத்தை போக்குவரத்து பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

(ஆ) பால் கேன்கள் சங்கங்களிடமிருந்து ஏற்றப்படும் போதும் ஒன்றியத்தில் இறக்கப்படும் போதும் பால் கேன்களோ (அல்லது) பாலுக்கோ சேதாரம் ஏற்படுத்தக் கூடாது. அவ்வாறு சேதாரம் ஏற்படின் அவற்றின் கிரையத்தை போக்குவரத்துக் கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

14. ஒப்பந்ததாரர் வாகனத்தில் பால் பண்ணையிலிருந்து/பால் குளிருட்டும் நிலையங்களில் இருந்து சங்கங்களுக்கு அனுப்பப்படும் தீவனம், கன்று வளர்ப்புத் தீவனம், ஸ்டோர்ஸ் அயிட்டங்கள், புத்தகம் மற்றும் படிவங்கள், பால் பரிசோதனைக் கருவிகள், டிரக் ஸிலிப், டீப்பால், ஆசிட், அமிலம், ஆல்கனிால் போன்ற அனைத்தையும் கூடுதல் கட்டணம் ஏதுமின்றி ஏற்றிச் செல்ல வேண்டும். அதே போல் சங்கங்களிடமிருந்து அனுப்பப்படும் அனைத்து வகை பொருள்களையும் ஏற்றி வர வேண்டும். அவ்வாறு ஏற்றி வராத பட்சத்தில் வேறு வாகனத்தில் ஏற்றி அனுப்பினால் அதற்குண்டான கட்டணத்தை ஒப்பந்ததாரரின் பில்லில் பிடித்தம் செய்யப்படும் அல்லது இதன் காரணமாக ஒப்பந்தம் ரத்துசெய்யப்படும்.

15. ஒப்பந்ததாரர் பால் பண்ணையிலிருந்து/BMC/பால் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து இரு வேளைகளிலும் காலி கேன்களை பெற்று சங்கங்களுக்கு வழங்க வேண்டும்.

16. ஒப்பந்த வாகனத்தில் பால் கேன்களுடன் கால்நடைகளையோ, பயணிகளையோ அல்லது மற்ற பொருட்களையோ ஏற்றிச் செல்லக் கூடாது. அவ்வாறு ஏற்றிச் செல்வது தெரியவந்தால் அந்த நேரத்திற்கான போக்குவரத்துக் கட்டணம், நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

17. பிணை வைப்புத் தொகை திருப்பித்தரப்படும் வரை எவ்வித வட்டியும் தரப்படமாட்டாது.

18. பிணை வைப்புத் தொகை ஒப்பந்த காலம் முடிந்து ஆறுமாதம் கழித்தோ அல்லது ஒன்றிய அவ்வாண்டு தணிக்கை முடிந்த பின்னரோ அதில் எது முந்தியதோ அப்போதுதான் திருப்பித்தரப்படும். மேலும் வாகன ஒப்பந்ததாரர் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒன்றியத்திற்கு பின்னர் நட்டம் ஏற்படாத வகையில் பாதுகாப்பு உத்திரவாத சான்றிதழினை (IndemnityBond) நோட்டரி பப்ளிக் வழக்கறிஞரால் சான்று செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

19. ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒப்பந்த சட்ட திட்டங்கள்(Terms and Conditions) மீறினாலும் அல்லது அவற்றை முழுமையாக பின்பற்ற தவறினாலோ அல்லது அவற்றில் ஏதாவது ஒரு விதியை மீறினாலோ அதனால் ஒன்றியத்திற்கு ஏற்படக் கூடிய நட்டத்தினாலோ பிணை வைப்புத் தெலீகை முழுமையாக முடக்கப்படும்.

20. ஒப்பந்ததாரர் தமது வாகனத்திற்கு சுங்க வரி செலுத்தியிருந்தால் அவை திருப்பி வழங்கப்படமாட்டாது.

21. அங்கீகரிக்கப்பட்ட வாகன உரிமையாளர் ஒரு முறை மட்டும் ரூ.11/- செலுத்தி இவ்வொன்றியத்தின் இணை அங்கத்தினராக இணைத்துக் கொள்ளப்படவேண்டும். அவை திருப்பித்தரப்படமாட்டாது. ஆனால் அவர் இவ்வொன்றிய தேர்தலில் வாக்கு அளிக்கவோ அல்லது ஒன்றிய லாபத்தில் பங்கு பெறவோ உரிமை இல்லை.

22. போக்குவரத்துக் கட்டணப் பட்டியல் 15 நாட்களுக்கு ஒரு முறை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு 5 தினங்களுக்குள் பெறப்படும் பட்டியல் அடுத்துவரும் 10 தினங்களுக்குள் ஒப்பந்ததாரர் ஆரம்பிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட வங்கி சேமிப்பு கணக்கிற்கு அனுப்பப்பட்டு ஒப்பந்ததாரரின் கணக்கில் வரவு வைக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் நேரடியாக காசோலையோ, ரொக்கமோ வழங்கப்படமாட்டாது.தாமதமாக கொடுக்கப்படும் பட்டியல்கள் காலம் தாழ்த்தி பட்டுவாடா செய்யப்படும். எனவே ஒன்றியம் குறிப்பிடும் வங்கிகளில் ஒப்பந்ததாரர் சேமிப்பு கணக்கு அல்லது நடப்பு கணக்கு துவங்கி அவருடைய வங்கி கணக்கு எண்னை ஒன்றியத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும்.

23. ஒப்பந்ததாரர் கோவை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய பொது மேலாளர் அவர்கள் அவ்வப்போது நிர்ணயம் செய்யும் விதிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

24. ஒப்பந்ததாரருக்கும், ஒன்றியத்திற்கும் அல்லது ஒப்பந்ததாரரருக்கும், சங்கத்திற்கும் ஏற்படும் தகராறுகளுக்கும் ஒன்றிய பொது மேலாளர் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

24. ஒப்பந்த காலத்தில் பால் கேன்களோ அல்லது கேன் மூடிகளோ தொலைந்து விட்டால் அவற்றின் கிரையத்தொகையை அடுத்து வரும் போக்குவரத்துக் கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும்.

**25.** ஒப்பந்ததாரர் அங்கீகரிக்கப்பட்டுள்ள வாகன கொள்திறனுக்கு குறைவான வாகனத்தை இயக்கினால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள போக்குவரத்து கட்டணத்தில் 50% தண்டக் கட்டணமாக நாள் ஒன்றுக்கு விதிக்கப்பட்டு போக்குவரத்து கட்டணத்தில் பிடித்தம் செய்யப்ப**டும்.**

26. ஒப்பந்த வாகனத்தில் பணிபுரியும் ஊழியர்களோ அல்லது வேலையாட்களோ அல்லது ஒப்பந்தததாரரின் ஏஜெண்டுகளோ எந்தவிதமான முறைகேடுகளிலும் ஈடுபடுவது கண்டு பிடிக்கப்பட்டால் அதனால் ஏற்படும் இழப்பிற்காக ஒன்றியம் முடிவு செய்யப்படும் தொகையை ஒப்பந்ததாரர் தன் சொந்த பொறுப்பில் ஈடு செய்ய வேண்டும்.

27. ஒப்பந்ததாரர் தமது வாகனத்தை பால் பண்ணையிலோ அல்லது பால் குளிரூட்டும் நிலையத்திலோ சுத்தம் செய்தாலும் அல்லது சுத்தம் செய்ய அனுமதித்தால் ஒவ்வொரு எச்சரிக்கைக்கும் ரூ.50/- அபராதமாக விதிக்கப்படும்.

28. பால் கேன்கள் போக்குவரத்துக்குரிய முக்கியமான சரக்குகள் ஆகும். சந்தர்ப்பங்களில் இவ்வொன்றியத்திற்கு சொந்தமான பிற பொருட்களும், பால் பாக்கெட்டுகளுடன் கூடிய டப்புகளும் போக்குவரத்து செய்யப்படும்.

29. ஒப்பந்த வாகனத்தில் ஒப்பந்ததாரரோ அல்லது அவரின் ஊழியர்களோ பால் ஏற்றி வரும்போது பால் திருடினாலோ அல்லது வேறு வகையில் முறைகேடுகள் செய்தாலோ அந்த வழித்தடத்தில் ஆரம்ப காலம் முதல் மொத்தக் குறைவுக்கும் அல்லது இழப்பிற்கும் அவரது போக்குவரத்து கட்டணம் பிடித்தம் செய்வதுடன் அன்னாரது ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

30. ஒப்பந்த காலம் முடிவடைந்து அவ்வழித்தடத்தில் இணைக்கப்பட்டிருந்த பாக்கியில்லா சான்றுகள் (No due certificate) பெறப்பட்டு அளித்த பின்னர் ஒப்பந்தவிதிமுறை எண்.18-க்கு உட்பட்டு பிணை வைப்புத் தொகை விடுவிக்கப்படும்.

31. ஒப்பந்ததாரர் ஒப்பந்த வாகனத்தை ஒன்றியத்தின் அனுமதியின்றி திடீரென்று வாபஸ் பெற்றால் அல்லது நிறுத்திவிட்டால்,

(அ) பிணை வைப்புத் தொகை முழுவதும் முடக்கி வைக்கப்படும்.

(ஆ) அவ்வாறு நிறுத்தப்படும் வரை போக்குவரத்துக் கட்டணம்விடுவிக்கப்படமாட்டாது.

(இ) மாற்று வாகன ஒப்பந்த விதிப்படி அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்து கட்டணத்தை விடஅதிகமாக ஒன்றியத்தால் செலவிடப்பட்டிருந்தால் ஒப்பந்ததாரின் நிலுவையில் உள்ள போக்குவரத்து கட்டணத்திலிருந்துபிடித்தம் செய்யப்படும் மற்றும் ஒப்பந்ததாரரின் மேல், நடவடிக்கை எடுத்துவசூல் செய்யப்படும்.

32. பொது மேலாளர் கோவை மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட், கோவை அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தை எந்தவித காரணமும் காட்டாமல் 30 நாள் முன்னறிவிப்பு செய்து ரத்து செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார்.

33. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் ஒப்பந்தத்தை ரத்து செய்வதினால் வாகனம் இயக்க முடியாமல் போனால் அதனால் ஏற்படும் இழப்பிற்கோ அல்லது வேலை நிறுத்தம், பந்த் மற்றும் இயற்கை சீற்றம் போன்ற எதிர்பாராத காரணங்களினால் வாகனம் இயக்கப்படாமல் போனாலோ,ஒன்றியத்திடமிருந்து எந்தவித இழப்பீடும் கோர முடியாது.

34. ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலத்தில் மோட்டார் வாகன சட்டபடி மோட்டர் வாகன வரி செலுத்த வேண்டிய காலாண்டில் வரி செலுத்தப்படாமையால் வாகனம் தொடர்ந்து இயக்க முடியாத நிலை ஏற்படின் அந்த காலத்திற்காக எந்தவித இழப்பீடும் ஒன்றியத்திடமிருந்து கோரமுடியாது.

35. டெண்டர் கோருபவர்கள் தங்களது பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தினை டெண்டர் படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டி டெண்டர் கோர வேண்டும்.

36. அனுமதியளிக்கப்பட்ட ஒப்பந்த வாகனம் விபத்து ஏற்பட்டு இயக்க இயலாத நிலை ஏற்படுமாயின் ஒப்பந்ததாரரே தன் சொந்த பொறுப்பில் அதே கொள்ளளவு உள்ள மாற்று உரிமம் பெற்றுள்ள வாகனம் ஏற்பாடு செய்து அலுவலக அனுமதி பெற்று இயக்க வேண்டும்.

37. ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரியும் அனைத்து நிரந்தரம் மற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு குறைந்த பட்சமாக ஒரே நாள் சம்பளம் மற்றும் கூலி பெற்றவராயினும் ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் மாநில காப்பீட்டு திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பது சட்ட பூர்வமானதாகும். மேற்காண் சட்டத்தின்படி தொழிலாளர் வைப்பு நிதி மற்றும் தொழிலாளர் மாநில காப்பீட்டு திட்டத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை மாதந்தோறும் குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தப்பட வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும். இதில் ஒப்பந்ததாரர் தவறும் பட்சத்தில் இது சம்பந்தமாக ஏற்படும் விளைவுகளுக்கு ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பாவார். ஒன்றியம் இது சம்பந்தமான எந்த பொறுப்பும் ஏற்றுக்கொள்ளாது.

38. இந்திய வருமான வரி சட்டப்படி ஒவ்வொரு போக்குவரத்து கட்டண பில்லிலும் வருமான வரி பிடித்தம் செய்யப்படும். ஒவ்வொரு வருட முடிவிலும் ஒன்றியத்திலிருந்து பிடித்தம் செய்து செலுத்தப்பட்ட வருமான வரி விபரம் பாரம் -I6-ஏ ல் குறிக்கப்பட்டு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும்.

39. வருமான வரித்துறையினரால் வாகன ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கப்பட்ட நிரந்தர வருமான வரிக் கணக்கு எண் (PAN No.) பெற்று ஒன்றியத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

40. ஒப்பந்த வாகனம் பால் பண்ணை/பால் குளிரூட்டும் நிலையங்களில் பால் கேன்களை ஏற்றும் போதும், இறக்கும் போதும் தூக்கி எறிதல் கூடாது. அவ்வாறு கேன்களுக்கு ஏற்படும் சேதாரத்திற்கு ஒப்பந்ததாரரே முழுப் பொறுப்பாவார். கேன்கள் ஏற்றும் போதோ இறக்கும் போதோ தூக்கி எறிவது கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கு அபராதத் தொகை ரூ.500/-வரை விதிக்கப்படும்.

4I. ஒப்பந்ததாரர் லாரி/மினி லாரி ஆகியவற்றில் I அடி உயர்ம் 3/4 அடி அகலம் I/2 அடி கனத்திற்கு தகவல்களை தெரிவிக்க தபால் பெட்டி சொந்த செலவில் வைக்கப்பட வேண்டும்.

42. ஒப்பந்த உத்திரவு கிடைத்தவுடன்ஏற்கனவே முன்வைப்புதொகையாக செலுத்தப்பட்டுள்ள தொகை போக மீதி I% தொகையை உடன் செலுத்தி ஒன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

43. உதிரி பாக விலை உயர்வு, டயர் விலை உயர்வு, வரி உயர்வு ஆகிய விலை உயர்வுகள் ஏற்பட்டாலும் அங்கீகரிக்கப்பட்ட வாடகை உயர்த்தித்தரப்படமாட்டாது.

44. ஒப்பந்த விதிகளை அதிகப்படுத்தவோகுறைக்கவோ,மாற்றியமைக்கவோ பொதுமேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

45. மேற்படி ஒப்பந்த விதிகள் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தம் I998ம் ஆண்டு சட்டம் 43 (Act) மற்றும் அதைத்தொடர்ந்து தமிழக அரசால் இயற்றப்பட்ட விதிகள் (Rules) ஆகியவற்றிற்குட்பட்டதாகும்.

46. ஓட்டுநர் மற்றும் துப்புறவாளர் சட்டப்படி சீருடை அணிந்திருத்தல் வேண்டும். அவ்வாறு அணிந்திருக்காவிடில் ஏற்படும் விளைவுகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

47. அரசு ஆணைக்கிணங்க ஓட்டுநர் மற்றும் துப்புரவாளர், வாகனம் இயக்கும்போது புகை பிடித்தல் மற்றும் மது அருந்துதல், ஒழுங்கீனச் செயல்புரிதல் போன்ற நடவடிக்கைகள் கவனத்திற்கு வரும்போது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

48. வாடகை ஒப்பததாரர்கள் டெண்டரில் கலந்து கொள்கிறபோது 2010ம் அதற்கு பின் பதிவு செய்யப்பட்ட மாடல் வாகனங்கள் வைத்திருப்பவர்கள் மட்டுமே கலந்து கொள்ள இயலும்.

49. இந்த ஒப்பந்தம் தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையே எவ்வித தாவா ஏற்படினும் அது கோவை துணைப்பதிவாளர்(பால்வளம்) அவர்களின் நீதி மன்றத்தில் வைத்தே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

50. டெண்டர் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு அல்லது குறைவு ஏற்படும் சமயங்களில் இணைய வழிகாட்டுதலின் பேரிலும் நிர்வாகக் குழுவின் ஒப்புதலின் பேரிலும் டீசல் விலை உயர்வை உயர்த்தியோ அல்லது குறைத்தோ வழங்குவதற்கு ஒன்றிய பொது மேலாளருக்கு அதிகாரமுண்டு.

51. ஒப்பந்த காலத்தில் வண்டி ஓட்டுனரோ, கிளீனரோ ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் அதற்கான விளக்கத்தை கடிதம் மூலம் ஒப்பந்ததாரரிடம் கேட்கும்பொழுது குறிப்பிட்ட காலத்திற்குள் (15 தினங்களுக்குள்) விளக்கம் அளிக்க வேண்டும். அவ்வாறு விளக்கம் அளிக்காமல் இருக்கும் பட்சத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் அபராதம் விதித்து வாடகைக் கட்டண கேட்பினையில் பிடித்தம் செய்யப்படும்.

52. தேர்வு பெற்ற ஒப்பந்ததாரர்க்ள் தங்களுடைய மாதிரி கையொப்பத்தினை அதற்கான படிவத்தில் ஒன்றிய ஒப்பந்தப்புள்ளிக்குழு அலுவலர்கள் முன்னிலையில் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். ரேசன் கார்டு நகல் மற்றும் குடியிருப்புச் சான்றிதழ் (தற்காலிகம் மற்றும் நிரந்தரம்) வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

53. ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்ட வாகனத்தைத் தவிர மாற்று வாகனம் இயக்குவது தெரியவந்தால் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் காப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

54. ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் தனியார் பால் பண்ணைகளில் பால் சேகரம். விநியோகம் மற்றும் பால் பொருட்கள் விற்பனை தொடர்பான ஒப்பந்தம் செய்திருக்கக்கூடாது. பின்னர் ஒப்பந்தக்காலத்தில் தனியார் பண்ணையில் தொடர்பு இருப்பது தெரிய வரும் போது அவருடைய ஒப்பந்தம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படுவதுடன் காப்புத்தொகையும் பறிமுதல் செய்யப்படும். மேலும் இவர்களது ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிக்கப்படும்.

55. ஒன்றியத்தின் மூலம் ஒப்பந்ததாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை காரணமாக ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு கருப்பு பட்டியலில் வைக்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர், ஒப்பந்ததாரரது உடன்பிறப்புகள், உறவினர்கள் மற்றும் இதர சொந்தங்கள் யாரும் ஒன்றியத்தில் நடைபெறும் எந்த டெண்டரிலும் கலந்து கொள்ள இயலாது. அவ்வாறு நிர்வாகத்திற்கு தெரியாமல் ஏதேனும் டெண்டரில் கலந்து கொண்டது பின்னர் தெரியவரும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56. ஒப்பந்தம் கோர விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடந்த காலங்களில் பால் பண்ணைகளில் ஒப்பந்த வாகனங்கள் இயக்கிய காலங்களில் எவ்வித முறைகேடுகளிலும் ஈடுபட்டு ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டிருக்கக்கூடாது.

57. டீசல் விலை உயர்வு / குறைவு ஆகியவற்றிற்கு தகுந்தாற்போல் ஒவ்வொரு 15 நாட்களுக்கும் ஒரு முறை வாடகை சராசரியாக கணக்கிட்டு கட்டணம் உயர்த்தியோ அல்லது குறைத்தோ வழங்கப்படும்.

58. பால் வழித்தடங்களில் புதிதாக தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படும் பட்சத்தில் தொகுப்பு குளிர்விப்பான்களின் கொள்ளளவினை சமன் செய்யும் பொருட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்ட பால் வழித்தடங்கள் மற்றும் வழித்தடங்களில் உள்ள அனைத்து சங்கங்களையும் தேவையின் அடிப்படையில் மாற்றம் செய்து பயண தூரத்தை கூட்டவோ, குறைக்கவோ அல்லது ஒப்பந்த வாகனத்தை இரத்து செய்வதற்கோ பொதுமேலாளாருக்கு முழு அதிகாரம் உண்டு.

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்று புத்தி சுவாதீனத்துடனும் சுய நினைவுடனும் ஒப்புதல் அளிக்கிறேன்.**

**டெண்டர்தாரர் கையொப்பம்**

.

*ஆவின் : கோவை*

ஈடிIII6, கோயமுத்துர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட்

பச்சாபாளையம், காளம்பாளையம்(அஞ்சல்) பேரூர்(வழி), கோயமுத்துர் 641 010

# பால் சேகர வழித்தட வாகன ஒப்பந்தப்புள்ளி

# படிவம் - II

# (வணிக ஒப்பந்தப்புள்ளி படிவம்)

ஒப்பந்தப்புள்ளி நாள் : 27.04.2023

ஈடி1116, கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்,கோயமுத்தூர் - 641 010

# பால் சேகர வழித்தடம் வணிக ஒப்பந்தப்புள்ளி படிவம்

# (Commercial Bid)

**படிவம் எண்-2**

**புகைப்படம்**

1.ஒப்பந்ததாரரின் பெயர் :

முகவரி :

தற்காலிகம் :

நிரந்தரம் :

2. ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ளும் தடத்தின் பெயர் :

3. வண்டியின் பதிவு :

4. வாகன கொள்ளளவு :

5. கோரும் ஒப்பந்தப்புள்ளி ஒரு கிலோ மீட்டருக்கு வாடகை தொகை : எண்ணால் எழுத்தால்

ரூ. பை ரூபாய்

6. ஒப்பந்தப்புள்ளி விதிகளை ஏற்றுக்கொண்டு கையொப்பம் இட்டுள்ளேன்.

இடம்:

நாள்: **டெண்டர்தாரர் கையொப்பம்**

*ஆவின் : கோவை*

ஈடி1116, கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட்

பச்சாபாளையம், காளம்பாளையம்(அஞ்சல்) பேரூர்(வழி), கோயமுத்தூர் 641 010

# டி போர்டு டாக்ஸி/வேன் ஒப்பந்தப்புள்ளி படிவம்

ஒப்பந்தப்புள்ளி நாள் : 27.04.2023

புகைப்படம்

படிவம் I

**கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்ஒன்றியத்தின் ____________ வழித்தடத்தில் 3I.03.2026 வரை வாகனம் வழுங்குவதற்கான**

## தொழில் நுட்ப தகவல் விண்ணப்பம் (Technical Bid)

| வ. எண் | விபரம் | |
|---|---|---|
| I. | விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் நிரந்தர முகவரி | |
| 2. | தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். | |
| 3. | வாகன பதிவுச் சான்று புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நபரின் பெயர் | |
| 4. | வாகனத்தின் பதிவு எண் | |
| 5. | வாகனத்தின் கொள்ளளவு | |
| 6. | வாகனம் பதிவு செய்யப்பட்ட ஆண்டு | |
| 7. | வாகனத்திற்கு எந்த தேதி வரை (பர்மிட்) உரிமம் உள்ளது? | |
| 8. | வாகனத்திற்கு எப்சி உரிமம் எந்த நாள் வரைஉள்ளது? | |
| 9. | வாகனத்திற்கு எந்த நாள் வரை வரி செலுத்தப்பட்டுள்ளது ? | |
| I0. | வாகனத்திற்கு எந்தநாள் வரை காப்பீடு செய்யப்பட்டுள்ளது ? | |
| II. | வருமான வரித்துறையினரால் ஒதுக்கப்பட்டுள்ள நிரந்தர வரிக் கணக்கு எண் | |
| I2. | வங்கி கணக்கு எண். விபரம் | |
| 3. | கடந்த காலத்தில் பால் பண்ணைக்கு வாகனம் இயக்கிய அனுபவ விபரம் | |
| I4. | முன் வைப்புத்தொகை (ஈ.எம்.டி) செலுத்தியதற்கான விபரம்(கேட்பு வரைவோலை எண்/நாள்) | |

ஒப்பந்த காலம் முடியும் வரையிலான காலத்தில் காப்பீடு, சாலை வரி மற்றும் இதர சட்டப்பூர்வமான கட்டணங்களை உரிய தேதிகளில் செலுத்திவிடுவேன் என உறுதியளிக்கிறேன்.

என்னால்/எங்களால் கொடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை என்று உறுதி கூறுகிறேன்/உறுதி கூறுகிறோம்.

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களின் சான்று செய்யப்பட்ட நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன்.

**டெண்டர்தாரர் கையொப்பம்**

இடம்:
நாள் :

**ED-III6/ கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட் கோவை.I0**
**வாகன ஒப்பந்தத்தில் கலந்து கொள்வதற்கான விதிமுறைகள்**

I. வாகன உரிமையாளர்கள் மட்டுமே வாகன ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

2. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒப்பந்தப் படிவத்துடன் இணைக்கப்பட்ட ஒப்பந்த விதிமுறைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டதாக கருதப்படும்.

3. வாகன உரிமையாளர்கள் தாங்கள் விரும்பும் வழித்தடத்தின் பெயரை கூறி ஒப்பந்தப்படிவம் பெற வேண்டும். அவ்வாறு கூறி பெறப்பட்ட ஒப்பந்தப்படிவத்தை வேறு தடத்திற்கு உபயோகித்தால் அவரது ஒப்பந்தப்படிவம் முழுமையாக நிராகரிக்கப்படும்.

4. வாகன உரிமையாளர்கள் தங்களது வாகன பதிவு எண்ணை ஒரு குறிப்பிட்ட வழித்தடத்தில் குறிப்பிட்ட பிறகு, அதே வாகன எண்ணை மற்ற வழித்தடங்களில் குறிப்பிடலாகாது. அவ்வாறு குறிப்பிட்டிருந்தால் அன்னாரது வாகன ஒப்பந்தப் படிவம் எவ்வித காரணமும் காட்டாமல் நிராகரிக்கப்படும்.முன் வைப்புத் தொகையும் திருப்பித்தரப்படமாட்டாது.

5. வாகன உரிமையாளர்கள் டெண்டர் விவரங்களை **www.tenders.tn.gov.in, www.tntenders.gov.in** மற்றும் **www.aavinmilk.com** மூலம் இலவசமாகவும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

6. ஒப்பந்தப்படிவத்துடன் கீழ்க்காணும் ஆவணங்கள் இணைக்கப்படவேண்டும். பால் சேகரிப்பு வழித்தடத்திற்கு (கீழ்க்கண்ட பட்டியலின்படி) பிணை வைப்புத் தொகையாக இணைய வழியாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

| வ. எண் | வழித்தடம் | உத்தேச தூரம் (மாறுதலுக்குட்பட்டது) கி.மீ. | வாகனக் கொள்ளளவு | பிணைவைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கோவை பால் சேகர குழு | 3000 / மாதம் | டாக்சி / ஆம்னி | 19,400 |
| 2 | சண்முகாபுரம் பால் சேகர குழு | 2500 / மாதம் | டாக்சி / ஆம்னி | 16,200 |
| 3 | சுல்தான்பேட்டை பால் சேகர குழு | 2000 / மாதம் | டாக்சி / ஆம்னி | 13,000 |
| 4 | அன்னூர் பால் சேகர குழு | 2500 / மாதம் | டாக்சி / ஆம்னி | 16,200 |
| 5 | அன்னூர் இடுபொருள் | 2000 / மாதம் | டாக்சி | 12,200 |
| 6 | சண்முகாபுரம் இடுபொருள் | 2000 / மாதம் | டாக்சி | 12,200 |
| 7 | சுல்தான்பேட்டை இடுபொருள் | 2000 / மாதம் | டாக்சி | 12,200 |
| 8 | மதுக்கரை இடுபொருள் | 1500 / மாதம் | டாக்சி | 9,200 |
| 9. | துணைப்பொதுமேலாளர் வாகனம் | 4000 / மாதம் | டாக்சி | 24,500 |

7. ஒப்பந்த விலைப்புள்ளி கி.மீ. ஒன்றுக்கு எவ்வளவு என்று குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்..

8. இவ்வொன்றிய டெண்டர் குழுவால் குறிப்பிட்ட தேதியில் குறிப்பிட்ட நேரத்தில் வருகை தந்துள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

9. ஒப்பந்தம் முடிந்து வாகனத்தை குறிப்பிட்ட தடத்தில் செலுத்தி ஒப்பந்ததாரருக்கு இவ்வொன்றியத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு வாகனத்தை செலுத்த முன் வராவிடில் அன்னாரது முன் வைப்புத் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

10. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரின் முன் வைப்புத் தொகை பிணை வைப்புத் தொகை கணக்கிற்கு மாறுதல் செய்யப்படும்

11. பொது மேலாளர், கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட் கோவைஅவர்களுக்கு குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளையோ, எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையோ (அ)ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தப் புள்ளியையோ எவ்வித காரணமும் காட்டாமல் ஏற்கவோ (அ) மறுக்கவோ நீட்டிக்கவோ (அ) ரத்து செய்யவோ முழு உரிமையுண்டு. இதில் பொது மேலாளரின் முடிவே இறுதியானது.

**டெண்டர்தாரர் கையொப்பம்**

**கீழ்க்கண்ட உறுதிமொழிகளை ஒப்புக்கொண்டு கீழே கையொப்பம் இட்டுள்ளேன்.**

I. பால் சேகரப் பணிக்குழு/கால்நடை மருத்துவப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள டேவணித் தொகை 1%யை (பட்டியலில் உள்ளவாறு) இணைய வழியாக செலுத்த சம்மதிக்கிறேன்.

2. வண்டியின் ஒரிஜினல் ஆர்.சி.மற்றும் சம்பந்தப்பட்ட பத்திரங்களை தேவைப்படும் சமயங்களில் காண்பிக்க சம்மதிக்கிறேன்.

3. ஆர்.சி.புத்தகம் வண்டியின் உரிமையும் எனது பெயரிலேயே உள்ளது. இதில் எவ்வித வில்லங்கமும் இல்லையென உறுதி கூறுகிறேன். வில்லங்கம் இருக்கும் பட்சத்தில் எனது ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்க சம்மதிக்கிறேன்.

4. பால் வழித்தடத்தை / மருத்துவ வழித்தடத்தை நன்கு பார்வையிட்ட பின்னரே ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டேன்.

5. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட “டி” போர்டு கார்/வேன் நல்ல நிலையில் உள்ளது என உறுதிகூறுகிறேன்.

6. ஒப்பந்தப்புள்ளி படிவத்தை நானே எனது சுயநினைவோடு பூர்த்தி செய்து கையொப்பம் இட்டுள்ளேன். இதில் பிறருடைய தலையீடு எதுவும் இல்லை என உறுதி கூறுகிறேன்.

**டெண்டர்தாரர்** கையொப்பம்

**ஈடி 1116, கோயமுத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிடெட்**

**கோயமுத்தூர் - 641 010**

**<u>பால் சேகரப் பணிக்குழு/கால்நடை மருத்துவப் பணிக்குழு ஒப்பந்த விதிகள்</u>**

1. ஒப்பந்ததாரர் 31.03.2026 முடியவோ, ஒப்பந்த காலம் முடிவுற்று மறு டெண்டர் மேற்கொண்டு ஆணை பிறப்பித்து நீட்டிக்கும் காலம் வரையிலோ அல்லது மூன்று மாதங்கள் இதில் எது குறைவோ அந்தக் காலம் வரை ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும்.

2. இந்த ஒப்பந்தத்தில் சேர்ந்த பின்னர் இதே காரை வேறு எந்த ஒப்பந்தத்திலும் சேர்க்கக்கூடாது. ஒரு ஆர்.சி.புத்தகத்தை வைத்துக் கொண்டு ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளுக்கு டெண்டர் கோரினால் அவரின் டெண்டர் நிராகரிக்கப்படும்.

3. டெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்ட டெண்டர்தாரர் ஒரு வாரத்திற்குள் ஒன்றியம் கூறும் வங்கியில் கணக்கு ஆரம்பித்து அதற்கான கணக்கு எண்ணை ஒன்றியத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

4. டெண்டரில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொரு மார்க்கத்திற்கும் 1% டேவணித் தொகையாக பட்டியலில் கண்டுள்ளவாறு இணைய வழியாக செலுத்தப்பட வேண்டும்.

5. கால்நடை மருத்துவ பணிகள் மற்றும் பால் சேகரிப்புக்குழு பணிக்கு தடையேற்படாதவாறு வண்டிகள் எப்போதும் நல்ல நிலையில் இயக்க கூடியதாக இருக்க வேண்டும்.

6. கால்நடை மருத்துவ பணிக்கு / பால் சேகரிப்புக்குழு பணிக்கு சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவர் மற்றும் குழுத்தலைவர்கள் குறிப்பிடும் நேரங்களில் தவறாமல் காரினை அனுப்ப வேண்டும். அவ்விதம் அனுப்பப்படாத போது மாற்று ஏற்பாடு ஒன்றியம் செய்து அதனால் ஏற்படும் அதிகப்படியான தொகை ஒப்பந்ததாரரின் வாடகை மற்றும் டெபாசிட் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.

7. ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட பணிக்கு செல்லுகின்றபோது சங்கங்களுக்குத் தேவையான திரவ நைட்ரஜன், உறைவிந்து குச்சிகள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான மருந்துகளை ஏற்றிச் செல்ல வேண்டும்.

8. குறிப்பிட்ட பணிகளுக்கு தடையேற்படாதவாறு வண்டிகள் நல்ல நிலையில் இயங்கக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறு வண்டிகள் கால்நடை மருத்துவத் தடத்தில் பழுது ஏற்பட்டால் கால்நடை மருத்துவர் மற்ற சங்கங்களுக்கு செல்ல இயலாமல் போகும் பட்சத்தில் மீதியுள்ள சங்கங்களுக்கு சங்கம் ஒன்றிற்கு ரூ.50/- வீதம் அபராதம் வசூல் செய்யப்படும்.

9. மருத்துவப் பணியோ ஆய்வுப் பணியோ இல்லாத போது ஒப்பந்த வாடகைக்காரை பிற பணிக்குச்செல்ல குறிப்பிடும்போது அதன்படி வண்டியை அனுப்பி வைக்க வேண்டும்.

10. ஒப்பந்ததாரர் டெண்டர் விதிப்படி நடவாத போதோ அல்லது திடீரென்று காரை நிறுத்திக் கொண்டாலோ எவ்வித முன்னறிவிப்பின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படுவதுடன் டெபாசிட் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

11. ஒப்பந்த விதிகளில் குறிப்பிடாத வேறு எந்தவிதமான ஒன்றியத்தைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபட்டால் ஒப்பந்தத்தை எந்தவித முன்னறிவிப்பின்றி ரத்து செய்ய பொது மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு.

12. ஒப்பந்தம் ஏற்கப்பட்டவுடன் ஒப்பந்ததாரர் ரூ,100/-க்கு குறையாமல் முத்திரைத்தாளில் ஒன்றியத்துடன் ஒப்பந்த விதிகளை ஏற்று ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

13. நிர்வாகம் விரும்பினால் 15 நாட்கள் அவகாசம் கொடுத்து பால் சேகரப் பணிக்குழு வழித்தடத்தையோ/கால்நடை மருத்துவப் பணிக்குழு வழித்தடத்தையோ முழுமையாக நிறுத்திக் கொள்ள நிர்வாகத்திற்கு முழு உரிமையுண்டு.

14. உதிரி பாக விலை உயர்வு, டயர் விலை உயர்வு, வரி உயர்வு ஆகிய விலை உயர்வுகள் ஏற்பட்டாலும் அங்கீகரிக்கப்பட்ட வாடகை உயர்த்தித் தரப்படமாட்டாது.

15. ஒப்பந்ததாரர் ஒப்பந்த காலத்தில் ஒப்பந்த நிபந்தனைகளின்படி செயல்படாமல் மீறி செயல்பட்டாலோ அல்லது வண்டியை முன்னறிவிப்பின்றி நிறுத்திக் கொண்டாலோ ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், வைப்புத் தொகையை பறிமுதல் செய்யவும் நிர்வாகத்திற்கு முழு உரிமையுண்டு. மேலும் மாற்று வண்டி ஏற்பாடு செய்யப்பட்டு அதனால் ஒன்றியத்திற்கு ஏற்பட்ட அதிக செலவும் ஒப்பந்ததாரரின் வாடகை பில்லில் பிடித்தம் செய்யப்படும்.

16. ஒப்பந்ததாரர் கால்நடை மருத்துவர்/பால் சேகரிப்புக் குழு தலைவர் அறிவிக்கும் நேரத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட வண்டி அனுப்ப இயலவில்லை என்றால் அவரே வேறு ஒரு மாற்று வண்டி ஏற்பாடு செய்து குறித்த நேரத்தில் பணிகள் பாதிக்காத வகையில் அனுப்ப வேண்டும்.

17. ஒன்றியத்தின் விதிமுறைகளின்படி வண்டியை குறித்த நேரத்தில் அனுப்பாமலோ (அ) பழுதடைந்திருந்தாலோ இவ்வொன்றியமே மாற்று வண்டி ஏற்பாடு செய்து பணியை முடிக்கப்படுவதுடன் அதனால் ஏற்படும் அதிக செலவுத் தொகை வண்டி ஒப்பந்ததாரரிடம் வாடகை கட்டணத்தில் வசூல் செய்யப்படும்.

